தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௬ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௧ விகிருதி—ஆவணி 1950—ஆகஸ்டு | மலர் ௫

சென்னை மாநில முதலமைச்சர் வருகை.

நிகழும், விகிருதி யாண்டு, ஆவணித்திங்கள் எ ஆம் நாள் (23—8—50) புதன்கிழமை பிற்பகல் ௨௩ நாழிகைக்கு (3-15 மணிக்கு) கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்திற்குச்சென்னைமாநில முதலமைச்சர் மாண்புமிக்க, திருவாளர் **P. S. குமாரசாமி ராஜா** அவர்கள் எழுந்தருளிச் சங்கத்தார் வழங்கும் வரவேற்புரையினை ஏற்கவும், ௨௩ஜ நாழிகைக்குத் திருவாவடுதுறை ஆதீன அருட்டிரு. அம்பலவாண தேசிகர் உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்திற்கு **அடிகோலவும்** இசைந்துள்ளார்கள்.

* * * * *

மாணவர் உணவு விடுதி:
திறப்பு விழா.
29—7—50.

நம் சங்கக் கல்வி நிலைய மாணவர்கள் நலனுக்கென ஓர் உணவு விடுதி, கரந்தைக் குதிரைக்கட்டித்தெருவில் நடைபெற்று வருகின்றது.

இவ்விடுதியினைச் சென்னைமாநில உணவுத்துறை அமைச்சர் மாண்புமிகு **ரோச் விக்டோரியா அவர்கள்** 29—7—50 சனிக்கிழமையன்று திறந்தருளி நல்வாழ்த்து வழங்கினர்கள்.

நம் சங்கத் தலைவர், முத்தமிழ் வள்ளல், ராவ் சாகிப் **அ. யா. அ. நாடார் அவர்கள்** அமைச்சரவர்கட்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள்.

வழியனுப்புக் கூட்டம்

16—8—50.

நம் உயர் நிலைப்பள்ளியில் புதிதாக அலுவலுக்கு வந்த திருவாளர் G. கன்னையன் B. Sc., அவர்கள், தமக்குக் கோயமுத்தூர் அரசினர் கல்லூரியில் (Govt. Arts College Coimbatore) கிட்டிய உயர் பதவியை ஏற்க 16—8—50 அன்று பள்ளிக்கூடத்திலிருந்து விடைபெற்றார்கள். அதை முன்னிட்டு அன்று மாலை வழியனுப்புக் கூட்டம் ஒன்றை மாணவர்கள் நடத்தினார்கள். அக்கூட்டம் மிகச் சிறப்பாகவும், பெருமையாகவும், நடைபெற்றது.

கூட்டத்திலும், அதற்குப்பின் சுமார் ஒரு மணி நேரம் வரையிலும் நம் எல்லை எங்கணும் அமைதியான உருக்க நிலை தான் பரவி இருந்தது. ஆரவாரமின்றி, வீண் ஓசையின்றி, மாணவர்கள் பிரிவுபெறும் ஆசிரியரைச் சூழ்ந்து, சூழ்ந்து, கலங்கி நின்றுகொண்டிருந்த நிலை, கண்டவர்களையும் கலங்க வைத்துவிட்டது.

நல்லாசிரிய, நன் மாணக்கர் தொடர்பும், பற்றும், இத் தகையது என்பதனை நாற்பது நாட்கள் மட்டுமே திருவாளர் G. கன்னையன் அவர்களிடம் பழகிய உயர் நிலைப்பள்ளி மாண வர்கள் 16—8—50 மாலை நன்கு விளக்கிவிட்டார்கள். எந்த இடத்திலும் எப்பொழுதும் கண்டிராத அரிய ஒரு நிகழ்ச்சி யைக்கண்டு வியந்ததாக அறிஞர் பலர் கூறிக்கொண்டார்கள்.

இந் நிகழ்ச்சிகளைத் தாமே ஒரு சிறு போதில், திறம்பட அமைத்து நடத்திய நன் மாணவர் திறமையும், அன்பும், போற்றற் குறியன.

நன்மாணவர், நல்லாசிரியர் வாழ்க !

* * * * *

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி கோயில்
மகா கும்பாபிஷேகப் பத்திரிகை.

19—8—50 சனிக்கிழமை யாக ஆரமபம்

21—8—50 திங்கட்கிழமை

காலை : 7-30 மணிக்குள் மகா கும்பாபிஷேகம்

மாலை : 5 மணிமுதல் மகாபிஷேகம்

இரவு : திருக்கல்யாணம்; திருவீதியுலாக்காட்சி

19—8—50 முதல் 21—8—50 மூன்று நாட்களிலும்

பன்னிரு திருமுறைப் பாராயணமும்,

வேதசிவாகம பாராயணமும்,

முத்தமிழ் மாநாடும் நடைபெறும்.

குறிப்பு :—*தருமபுரம், மாயூரம் ஜங்ஷனிலிருந்து கிழக்கே 3 கல் தூரத்தில் உள்ளது. பஸ், வண்டி வசதிகள் உண்டு.*

முத்தமிழ் மாநாடு

தலைவர்கள் :

திரு. R. P. சேதுபிள்ளை அவர்கள் B.A., B.L.

திரு. Dr. அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் M. A.

19—8—50 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு,

இயற்றமிழ்:

தலைவர் :

திரு. Dr. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் M. A.,

தமிழ்ப்பகுதித்தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தருமபுர ஆதீனத் தமிழ்ப்புலவர்

பேச்சாளர் : வித்துவான், திரு, S. உருத்திரபதி அவர்கள் M. A.,

தமிழ்ப்பேராசிரியர், ஸெண்ட்ரல்காலேஜ், பெங்களூர்.

—“ திருக்குறளும-திருமுறையும்”

,, வித்துவான், திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்

தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

—“ குழந்தையுள்ளம்”

,, வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான்சுவாமிகள்,

திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளைவிசாரணை.

—“திருமுறை இலக்கியம்”

20—8—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

இசைத்தமிழ் :

தலைவர் : R. P. சேதுபிள்ளை அவர்கள் B. A., B. L.,
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.

பண்டித வித்துவான்

பேச்சாளர் : திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்
தமிழ்த்துணைப்பேராசிரியர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.
—"இசைத்தமிழ் வளர்ச்சி"

,, வித்துவான், திரு. வே. துரைசாமி ஐயர் அவர்கள்,
தலைவர், ஸ்ரீசிவஞானபாலயசுவாமிகள் கல்லூரி, மைலம்.
—"சங்கஇலக்கியங்களிற்கண்ட இசை"

,, வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்,
சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை.
—"இசையால் தமிழ் பரப்பியவர்"

21—8—50 திங்கட்கிழமை. மாலை 6 மணிக்கு

நாடகத்தமிழ் :

தலைவர் : திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L.,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப்பல்கலைக் கழகம்.

பேச்சாளர் : திரு. முத்துசிவம் அவர்கள் M. A.,
தமிழ்ப்பேராசிரியர், டாக்டர் அழகப்பா கல்லூரி, காரைக்குடி.
—"தில்லைத் திருநடனம்"

,, திருமதி. இராம சீதாபாய் அவர்கள்,
தெய்வநெறிக்கழக அமைச்சர், தூத்துக்குடி.
—"கூத்துத் தமிழ்"

,, வித்துவான் ஸ்ரீமத்மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்,
திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை,
—"ஞானநாடகம்"

தனிச்சொற்பொழிவு:

பழநி, வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்,
சைவசித்தாந்தசரபம், சிவத்திரு. ஈசானசிவாசாரியார் அவர்கள்
—"ஞானனந்த பரிபாஷை"

இரவு 9 மணிக்கு

மன்னார்குடி, தருமபுர ஆதீன வித்துவான்,
கீர்த்தன குலசேகர, பாகவதர்,
பிர்மஸ்ரீ S. விஜயராகவாசாரியாரவர்கள்
"குருஞானசம்பந்தர்" கதாகாலக்ஷேபம்.
"நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞான சம்பந்தர்"

பட்டினத்துப் பிள்ளையார்.

சித்தாந்த கலாநிதி.
வித்துவான் ஔவை. சு. துரைசாமி, அண்ணாமலை நகர்.

(முற்றொடர்ச்சி: துணர் ௨௬, மலர் ௪, பக்கம் 120)

இவ்வாறு உவமைவகையான் மட்டுமன்றிக் கற்பனைவகையிலும் இவரது புலமை தலை சிறந்து விளங்குகிறது. திருவிடைமருதூரில் இவர் இருந்து வருகையில் அதன் இயற்கையழகு முற்றும் நன்கு கண்டிருந்தார். அதனால் அவ்வூரையும் அதனைச் சூழும் காவிரியாற்றையும் அழகுறப்புனைந்து கூறுகின்றார். "சந்தன சரள சண்பக வகுள, நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது, நவமணி முகிழ்த்த புதுவெயிலெறிப்ப, எண்ணருங் கோடி யிருடி கணங்கட்குப், புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த, திருவிடைமருது" (13) என்றும், தெருக்களின் சிறப்பை, "எழுநிலை மாடத்துச் செழுமுகி லுறங்க, அடித்துத் தட்டி எழுப்புவபோல, நுண்டுகிற்பதாகைகொண்டு கொண் டுகைப்பத், துயிலினீங்கிப் பயிலும் வீதித் திருமருது" (25) என்றும் புனைந்து கூறுவர். சீகாழிப்பதி ஊழிக்காலத்தெழுந்த பெருவெள்ளத்தில் தோணிபோல் மிதந்த செய்தியைக் குறிப்பிட்டு, அது, "காட்சியிற் பொலிந்த மாட்சிமைசிறந்த காழி" (19) எனவும், வேதம் போலும் கோபுரங்களும் சிவாகமம் போலும் மணிமேடைகளும், இந்திரன் போலும் எந்திரவாவிகளும் "எங்கணும் நிறைந்த வெங்குரு" (22) எனவும், தண்ணீர்ப் பந்தரும் அன்ன சத்திரங்களும் ஆடரங்குகளும் கலைபயில் கழகங்களும் மலர் மன்றங்களும் மணிநெடு வீதியுங்கொண்டு, "பூமகளுறையுளாமென விளங்கும், பெரும் புகழ்க் காழி" (28) எனவும், செங் தளிரும் மதுமலரும் காய்த் திரளும் செங் கனியும் தாங்கி நிற்கும் மாமரத்தை, வயிரமும் நீலமும் மரகதமும் மாணிக்கமுமாகிய மணிகள் "கிடைத்த சீர் வணிகரிற் படைத்த மாந்தருவும்" (16) எனவும், அரமியத்தைப் புன்னைப் பொழி லெனவும் செய் குன்றைக் கொன்றைக் காவெனவும் மயங்கி மொய்த்த வண்டினத்தின் கரு நிறத்தால் இரவு வந்ததென மயங்கி

ஆடவரும் மகளிரும் கூடி யின்புறுவர் (கழுமல. 28) எனவும் கூறுகின்றார். திருவேகம்ப முடையார் திருவந்தாதியில் காஞ்சிமா நகரையும் அதனைச் சூழ்ந்த கச்சி நாட்டையும் பாராட்டி அந்நாட்டின் நீர் நில வளங்களைச் சிறப்புற எடுத்தோதுவர்; தேன் முரல விளங்கும் தடம் பொழிலும் (3) வனமையிற் குன்று மதிலும் (10) தடங் கமலம் பூங்குடை கொள்ளும் புனல் வயலும் (51) பிறவும் கொண்ட காஞ்சிமா நகர், அமராவதிக்கு நேராம் (86) என்று வியந்துரைப்பார். இவ்வாறே திருவொற்றியூர், "இரு நில மடந்தைக்கு முகமெனப் பொலிந்த ஒற்றிமா நகர்" (ஒற்றி. 1) என்பது முதலாகப் பல இனிய சொற்றொடர்களால் சிறப்பித் துரைக்கின்றார்.

இனி, பட்டினத்தடிகளுடைய பாட்டினைப் படிக்குங்கால் பண்டை நூல்களின் கருத்துக்களும் சொற்களும் படிப்போருள்ளத்திற் றோன்றி அவருடைய பரந்த கல்வி நலத்தைப் புலப்படுத்துகின்றன. "எழுத்தி னுறழாது வழுத்து பொருளினறிக், குறிப்பொடுபடாது வெறித்த புன் சொல்லே, யாயினும பயந்த தஞ் சேயவர் சொலு மொழி, குழலினும் யாழினு மழகிதா மது போல்" (கழுமல 28) என்ற இது, "யாழொடுங் கொள்ளா பொழுதொடுபுணரா, பொருளறி வாராவாயினும் தந்தையர்க்கு, அருள் வந்தனவாற் புதல்வர் தம் மழலை" (புறம். 92) என்ற புறப்பாட்டையும், "குழலினிது யாழினிது என்ப தம் மக்கள், மழலைச்சொற் கேளாதவர்" (குறள்) என்ற திருக்குறளையும், "நெடுநீ ரென்னப்படு நெடு நாணில், தங்கிய மடியெனும் நங்குரம் சேர்த்தி" (கழுமல. 16) என்பது "நெடுநீர் மறவி மடி துயில் நானகும் கெடுநீரார் காமக் கலன்" (குறள்) என்னும் திருக்குறளையும், அடி யொன்று பாதல மேழிற்கு மப்புறம பட்டது இப்பால் முடி யொன்று இவ் வண்டங்க ளெல்லாங் கடந்தது "(கோயில். 6) என்பது. "பாதாள மேழினுங் கீழ்ச் சொற்கழிவு பாத மலர், போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே" (திருவெம) என்ற திருவாசகத்தையும், "அறிவும் சிந்தையும்....... சுவை யொளியூ றோசை நாற்றந் தோற்றம், என்றிவை முதலா விளங்குவ வெல்லாம், ஒன்ற நின்னடிக்கே ஒருங்குடன் வைத்து, நின்றனன் தமியேன" (ஒற்றி. 9) என்பது, "எண்ணமே யுடல் வாய் மூக்கொடு செவி கண்

என்றிவை நின்கணே வைத்து, மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன் கண்டாய்'' (வாழாப்) என்ற திருவாசகத்தையும் நினைப்பிக்கின்றன. இவ்வாறே ''கஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சினமாசுணம்'' (கோயில். 8) எனத் தொடங்கும் பகுதி திருஞானசம்பந்தருடைய, செடிகொள் நோயாக்கை யம்பாம் பின் வாய்த் தேரை'' (திருவாரூர்) என்ற திருப்பாட்டை நினைப்பிக்கின்றது.

இனி, புலன்களைந்தனையும் அடக்க வேண்டுமென வுரைத்த பண்டைச் சான்றோர்கள், அவற்றால் உண்டாகும் கேட்டினை நம் பட்டினத்தடிகளைப்போல் எடுத்துக்காட்டி வற்புறுத்தியோர் எவருமில்லை. இதனை, ''அழுக்குடைப் புலன் வழி இழுக்கத்தி னொழுகி, வளைவாய்த் தூண்டிலினுள் ளிரை விழுங்கும் பன் மீன போலவும (சுவை), மின்னும் விளக்கத்து விட்டில்போலவும் (ஒளி). ஆசையாம் பரிசத்தி யானை போலவும் (ஊறு) ஓசையின் விளிந்த புள்ளுப் போல வும் (ஓசை), வீசிய மணத்தின் வண்டு போலவும் (நாற்றம்), உறுவ துணராச் செறுவுழிச் சேர்ந்தனை'' (கோயில் 28) என வருவதனாலறியலாம்.

இறைவனுடைய ஆணைக்கு ''விரையாக் கலியெனும் ஆணை'' (கோயில் 4) என்று பெயர் கூறுவர்; இது திரு மாணிகுழி, திருப்புறம்பயம் கல்வெட்டுக்களிலும் காணப் படு வது. தில்லைவாழ் அந்தணர்கள், சிவபெருமான் நடனம் உகந்து உலகுயிர்கள் உய்யுமாறு அதனை மேற்கொண்டா னென்ற காரணத்தால் தில்லையில் நிறைந்திருக்கின்றன (திரு வேகம்ப. 47) ரென்றும், அதனால் அவர்கள் தில்லைக் கூத்தப் பெருமானை ''வாழ்வாகவும் தங்கள் வைப்பாகவும்'' (கோயில் 34) வணங்குகின்றார்கள் என்றும் இயம்புகின்றார். அவ்வந் தணர்கள் தில்லைப் பெருமானை இன்றும் தங்கட்கு வாழ்வாக வும வைப்பாகவும் கருதி வழிபடுகின்றனரெனபது அறிந்து இன்புறத் தகுவதொன்று.

திருவேகம்ப முடையார் திருவந்தாதியின் இறுதியில் தாம் பாடிய அந்தாதியின் செய்யுட்டொகை நூறு என்று கூறுவாராய், ''தமக்கு அன்பது பெற்றுப் பதிற்றுப் பத்துப் பாடி வைத்தார் பரவித் தொழுதா மவர் பாதங்களே'' என்றும், இதற்கு அவையடக்காக. ''போதம் பொருளாற்

பொலியாத புன்சொற் பனுவல்களும், வேதம் பொலியும் பொருளாமெனக் கொள்வர் மெய்த் தொண்டரே" (100) என்றும் கூறுவர். இவ்வாறு தொகை கூறுவதும் அவை யடக்கத்தை நூலின் இறுதியிலுரைப்பதும் ஆகிய செயல் வகைகள், இவர்க்குச் சில ஆண்டுகள் முன்பிருந்த சேரமான் பெருமாளிடத்தும் காணப்படுதலின், இவை அக்காலத்து வழக்கம் போலும் என எண்ணவேண்டி யிருக்கிறது.

இவர் காலத்தில் இவர்பால் தலைமைக் கணக்கராயிருந்த சேந்தனுர் தில்லையிலிருந்து திருத்தொண்டு பல புரிந்து, திருவிசைப்பா திருப்பல்லாண்டுகளைப் பாடி இறைவன் திரு வடி யடைந்தனர். பத்திரகிரியார் புலம்பல் எனப்படும் பாட்டுக்கள் பல பத்திரகிரியார் பேரால் வழங்குகின்றன.

இறைவன் ஆணைக்கு விரையாக் கலியென்று பெயரென்பது முதன் முதலில் பட்டினத்துப் பிள்ளையாரால் குறிக்கப் படுகிறது. பின்பு இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் திருமாணிகுழி, திருவதிகை, திருப்புறம்பயம் முதலிய இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் வழங்குவதாயிற்று. இக் கல்வெட்டுக்கள் வேந்தன் ஆணையைத் திருவாணையெனவும் கோயிலார் ஆணையை விரையாக் கலியாணை யெனவும் இவ் வாணை பிழைத்தாரை முறையே ஊர்ச்சபையாரும் அடியார் களான ஆண்டார்களும் முறை செய்வரெனவும் திருமாணி குழிக் கல்வெட்டொன்ருல் (S. I. I. Vol. VII. 785) அறி கின்ருேம். திருப்புறம்பயத்தில் "விரையாக் கலிப்பெருந் தெரு" (Rajendra I) என்ருெரு தெருவுண்டென அவ்வூர்க் கல்வெட்டு (A. R. 153 of 1932) கூறுகிறது. திருவிரையாக் கலி திருக்கண்ணப்ப தேவர் ஸ்ரீபாதம் (S. I. I. Vol. Ins. VIII. 319) எனத் திருவதிகைக் கல்வெட்டுக் (குலோத். II) கூறு கிறது. உத்தம சோழன் கல்வெட்டொன்று விரையாக் கலி யென்னும் நிறைகோலைக் குறிக்கிறது. (திருப்புறம்பயம்.)

திருஞான சம்பந்தர் முதலிய மூவரையும் இவர் முத்திறத் தடியர் என்றது கொண்டு, பிற்காலக் கல்வெட்டுக்கள் "முத் திறத்தார்" (S. I. I. Vol. No. 225.) என்றும், திருப்புறம் பயம் கல்வெட்டொன்று "முத்திறத் தடியர்" (343 of 1927) என்றும் கூறுகின்றன.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

இதயத்திலிருந்தே பெருமூளை முதலிய இடங்களுக்கு மனஞ் செல்லுகிறது. மனம் இதயத்தில் தங்கியிருப்பதற்கு ஓய்வு நிலை என்று கூறலாம். இந்த நிலையில் உலகப்பொருள் ஒன்றும் மனதிற்குத் தெரியாது,

நல்ல தூக்கமில்லாத போழ்து மனம் கண்டத்தில் தங்கி இருக்கும். அப்போது தான் கனவுதோன்றும். ஆதலால் இதனைக் கனவு நிலை என்று கூறலாம். இந் நிலையில் நடப்பது சில ஞாபகத்திலும் ஞாபகமில்லாமலும் இருக்கும்.

மனம் நனவின் கண் மூளையில் தங்கியிருக்கும் இந்நிலையில் நிகழுங் காரியங்கள் நன்ருக நினைவிருக்கும். ஆகவே, மனம் நன்ருக வேலைசெய்யும் இடம் மூளை என்பதும் அப்பொழுது நடப்பன ஞாபகம் இருக்கும் என்பதும், கனவில் சில ஞாபகத்திலும் ஞாபகமில்லாமலும் இருக்கும் என்பதும், அயர்ந்து தூங்கும்போது மனம் இதயத்தில் ஒடுங்கி ஓய்வாக இருக்கும் நேரம் என்பதும் தெரியவருகின்றன.

(க) நனவின்கண் வேலைசெய்யுங் கருவிகளாவன:—

அறிவுக் கருவிகள்	...	5
தொழிற் கருவிகள்	...	5
ஒலி முதலியன	...	5
வசனுதி	...	5
காற்று	...	10
உட்கருவி	...	3
புருடன்	...	1
உயிர்	....	1
ஆக	...	35

(உ) கனவின் கண் வேலை செய்யுங் கருவிகளாவன :-

காற்று	....	10
ஒலி முதலியன	....	5
வசனாதி	....	5
உட்கருவி	....	3
புருடன்	....	1
உயிர்	....	1
ஆக	....	25

(ஊ) நல்ல தூக்கம் அல்லது யோகத்தில் ஒடுங்கிய நிலையில் உள்ள கருவிகளாவன :—

1. உயிர்
2. சித்தம்
3. புருடன்: ஆக 3

இவ்வாறு கருவிகள் வேலை செய்வன என்னும் நுட்பத்தை யோகப் பயிற்சியுடையார் அல்லது ஞானங் கைவரப்பெற்ற பெரியோர்களுக்கே அறிந்துணரக் கூடிய ஆற்றல் உண்டு என ஞான நூல்கள் நவில்கின்றன.

" சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்தும்
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கிமிலந் தக்கரணம் புருட னோடு
நின்றதுமுப் பானைந்து நிலவுங் கண்டத்(து)
ஆக்கிய சொற்பன மதனில் வாயுபத்தும்
அடுத்த சத்தாதி வச னாதியாக
நோக்குகா ணம்புருட னுடனே
நுவல்வர் இருபத் தைந்தாம் நண்ணியோரே "

" சுழுத்தியித யந்தன்னிற் பிராணஞ் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும் "

—எனத் தாயுமானவரும்.

" சாக்கிரம் முப்பத் தைந்தும் நுதலினிற் கனவு தன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
நீக்கிய இதயந்தன்னில்.........",

எனச் சிவஞான சித்தியாரிலும் வருவனவற்று லுணரக் கிடக்கின்றன. இவற்றை வடநூலார் முறையே, சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என நவிலா நிற்பர்.

பொருந்துமா? (எ)

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, நன்னிலம்.

தமிழ்மொழியில் உள்ள பல்வகைச் சொற்களுக்கும் தனித்தனிப்பொருள் உண்டு. பொருள்களின் உண்மைத் தன்மை பலவுள, ஆதலின் அவ்வொரு சொல்லிற்குப் பல பொருள் உண்டாயின எனச் சொல்லாராயும் அறிஞர் கருத்தில் கருதிய முடிபேயாம்.

இங்கு ஆராய எடுத்துக்கொண்டது கன்னி என்ற ஒரு சொல்லைப்பற்றியேயாம். இதன் பொருளை (லெக்சிகன்) முதலிய அகரவரிசைகளில் கீழ்வருமாறு பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

1. குமரி
2. இளமை
3. புதுமை
4. முதல் நிகழ்ச்சி
5. அழிவின்மை
6. பெண்
7. என்றும் இளமையுடைய பெண்
8. தவப்பெண்
9. துர்க்கை
10. பார்வதி
11. குமரியாறு
12. புரட்டாசி
13. கற்றாழை

என்பனவாம். இப்பொருளும் முதன்முதற்றோன்றிய பொருளாகிய 'அழிவின்மை' என்ற பொருளைச்சார்ந்து தோன்றியுள்ளன. எவ்வாறெனின்,

1. அழிவில்லாத தன்மையையுடையவள் குமரி.
2. அழிவில்லாத வளர்ச்சியுடைய பருவம் இளமை.

3. அழிவில்லாத இளமைத்தன்மை புதுமை.

4. தன் ஆற்றல் அழிவில்லாதிருந்து முதன் முதற்போர் செய்தல் அல்லது இது வரையில் ஆற்றலழிவின்றி முதன் முதல் வேட்டையாடல் பற்றி முதல் நிகழ்ச்சி.

5. 6. அழிவில்லாத கன்னிப்பெண்ணைச் சுட்டுவதினின்று பெண்.

7. அழிவில்லாத பெண் என்றும் இளமையாயிருத்தல் பற்றி என்றும் இளமையுடையபெண்.

8. அழிவில்லாதவள் ஆதல்பற்றித் தவப் பெண்.

9. 10. அழிவில்லாத தன்மைபற்றித் தெய்வங்களையும் குறிக்கின்றன.

11. கன்னி என்ற சொல்லை முதலிற்கொண்டுள்ளது.

12. வடமொழியில் புரட்டாசியைக் கன்னியா மாதம் என்று கூறும் வழக்குப்பற்றி வந்தது.

13. குமரி என்று கற்றாழையை வைத்திய நூலில் கூறுவதால் குமரிக்கு மறு பெயர் கன்னி என்று வந்தது.

இந்தப்பொருளுண்மையை "தோணை கன்னி குமரி யழிவின்மைப்பேர் " என வரும் சூடாமணி நிகண்டுச் செய்யுள் வலியுறுத்தும். மேலும், 'கன்னித்தமிழ்', 'கன்னிமா மதில்' என்று வரும் ஆன்றோர் ஆட்சியும் சான்றாய் உள்ளன.

பொருந்துமா? சிந்திக்க!

உலக முப்பெருங் கவிகள்.

டாண்டே - இளங்கோ - ஷேக்ஸ்பியர்

(வேலூர்க் காசழகன்.)

பரிதியினொரு துளி சிதைந்து வீழ்ந்து வெம்மையகன்று தண்மை எய்திய இப்பாரிலிலங்கு மெண்ணில் உயிரினங்களுள் தலையாய மக்களின மறிவுபெற்றுக் கலையியலறிந்து பண்பெய்திப் பீடுற்றமை, கனிவுறும் கவிகளால் தான். உலகியலை யூன்றியறிந்து மன்பதை மாண்புற மணிமொழி மொழிந்து ஏனையோருள்ளத்தில் அறிவு ஒளி ஏற்றி நலமுறவைத்துக் குவலயத்தைக் களிப்புறும் கலைக் கோயிலாகமாற்றி, ஆளுமரசனழிந்தாலும், மக்கள் மடிந்தாலும், அழியா வாழ்வெய்திக் கழியாப் புகழ்பெற்று இகழா மகிழ்வுடன் என்றும் நின்றிலங்கும் பெற்றிமை எய்தியவர்கள் கவிகளே. மெய்ம்மையை உடலாகவும்-வாய்மையை ஆடையாகவும்-தூய்மையை அணிகலனாகவும் பெற்றுப் பேரறிவாம் பரம்பொருளைப்பற்றி ஒழுகி அலக்கணுறுமவனிக்குக் கற்பனையில் வழிந்தோடும் உயரிய ஒப்பற்ற பொன்னான கருத்துக்களையும், நலமுறவைக்கும் நற்கருத்துக்களையும் புலமை மெருகிட்ட நல்லிசைப் பாக்களால் பாடிப் பாரைப் பீடுறவைக்கும் பெருந்தகைமை கவிகளுக்கே உண்டு. மிகவுயரிய கவிகளைப் படிக்குங்கால் கனிவுறுங் கருத்துக்களின் உயிர்ப்பொருள்கள் உணர்ச்சியை யூட்டி விழிப்புண்டாக்கி உயர்நிலை எய்தவைத்தல் வெள்ளிடைமலை. வாழ்வில் கண்டவைகளையும், கற்பனையிலறிந்தவைகளையும், உணர்வு நிலையிலுணர்ந்தவைகளையும் உவகையுடனுரைத்து உலகை உயர்வுறவைப்பவர்கள் கவிகளே. கவிகளின் சிறப்புடைய கவிகள் உயரிய ஒழுக்கத்தையும்-அரிய அறிவையும்-பீடுடைப் பண்பாட்டையும் மக்களிடத்து நிலைக்கவைத்து நலமுறவைக்கும் நற்பணியை எண்ணுங்கால் கவிகள்தான் நமக்கு வழிகாட்டி; கவிகள் தான் நம்மை உய்விக்கும் அருளாளர்கள்.

மேற் புலத்தைப் பீடுறவைத்த எண்ணில் கவிகளுள் தலை சிறந்து இறவாத்தன்மை எய்தித் தகவுடன் என்றும் திகழும் அறுவருள், டாண்டாவும், ஷேக்ஸ்பியரும் ஐரோப்பிய இலக்கியத்திற்கு உயிரும் உடலும்போனறவாகள்; கீழ்ப் புலத்தில் இற்றைக் கையாயிரமாண்டுகட்கு முன்னர் ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியருக்குப் பின்னர் கடல்கோள் நிகழ்ந்து, கடைச் சங்கம் குலைந்து தமிழகம் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு ஒளி ஒழிந்து இருள் மலிந்த ஞான்று இறவாமொழிக் கிறவா இலக்கியத்தை நல்கி அதில் கலையியலையும் காதலியலையும் ஒளிரவைத்த உவமையற்ற உயர் தனிச் சிறப்பு, இளங்கோ அடிகள் ஒருவருக்கே உண்டு.

இம் முப்பெருங் கவிகள் குவலயத்தின் குன்ருச் சிறப்பெய்தி வானளாவும் உயர்பெரும் இலக்கியக்கலைக் கோயில் கட்டி அறிவியல் ஒளியை என்றுமொளிர வைத்து வையக இருளை இரித்து மன்பதையை அன்புப் பிழம்பாக்கி மாண்புற வைக்கும் பெருஞ் சிறப்பின் பெருமை என்னே!

மேற் புலத்தை உயர்வுறவைத்த கிரீக் நாடு நல்கிய நல்லிசைப் புலவர் ஓமருக்குப்பின் இடைக்காலம் வரை ஐரோப்பா நாடு இலக்கியமின்றி இடர்ப்பட்டிழிவுற்ற அவலத்தை 1265ல் இதாலி நாட்டில் ப்ளாரன்ஸ் என்ற நகரில் டாண்டே அரும்பி, இளமையில் பெறவல்ல கல்வியறிவு நிரம்பப்பெற்று அனைத்தையு மறிந்தவர்க்கு ஆசிரியர் என்ற உயர் பெரும் சிறப்புடன் இன்றுமிலங்கும் அறிவியல் கலைஞன் அரிஸ்டாடலைப் பின்பற்றி இலக்கியக்கலையியலில் முழுமை எய்தி உயர்பெரும் உச்சநிலை அடைந்து இறவாப்பெரும் நூலாம் டிவைன் காமெடியை வனைந்து சிறந்த பெரும் புகழ் நிரம்பப் பெற்ருலும், அவருக்குப் பன்னெடுங்காலம் பின்னர் தோன்றிய ஆங்கில நாட்டு நல்லிசைப் புலவன் டெனிசன், டாண்டேவைப் பிளாரன்ஸ் நகரின் அழகிய மணிமுடி என்றுகூறி, அவர் தம் பொன்னடிக்குத்தான் அணிந்துள்ள அழியும் மலர் மாலையின் மலர் ஒன்றை இடுவதாக வணங்கிப் பொன்னெழுத்துக்களால் புகழ்ந்த ஒன்றே டாண்டேவின் பெருமையை விளக்குகிறது.

டாண்டே அவலத்திலுரும்பி துன்பத்தில் தோய்ந்து இன்னலில் இடிபட்டு இயம்பொணு இடர்களுக்கு இரையாகித் துக்கமும், துயரமும், சோர்வும், கலக்கமும், கவலேயும் அவரைச் சூழ்ந்திருந்தாலும் அவருடைய வுள்ளம் மென்மையாகவும், தூய்மையாகவும், இரக்கமாகவும், உருக்கமாகவும் இருந்தமை பாராட்டற்குரியதே.

அரசியலும், சமூக இயலும் இவரை ஆட்டிப் படைத்தாலும், அரசியலில் மிக வுயரிய பதவியை இவர் அடைந்திருந்தாலும் கடைசியில் நாடு கடத்தப்பட்டு நலிந்து மெலிந்த இவர் தம் வாழ்வு, என்றும் பெரும் போராட்டமாகவே விளங்கிற்று. நன்மை தீமை என்ற ஆராய்ச்சியில் இவர் இறங்கி நன்முடிவுகாணுது மயங்கிக் கலக்க மெய்தினர். அரசினருக்கும் இவருக்கும் நிகழ்ந்த வேறுபாட்டின் காரணமாக இவர் நாடு கடத்தப்பட்டாலும் இவருடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டாலும் இவரை உயிருடன் எரிக்குமாறு இவர் மீது ஆணே இருந்தமையால் இக்கொடிய ஆணேக்குக் கட்டுப்படாமல் தலே நிமிர்ந்து பாரில் புகலிட மின்றிப்பெரிது மிடர்ப் பட்டுழன்ருர்.

இளமையில் இவருக்கு ஒன்பது வயதாகும்பொழுது எட்டு வயதுடைய கட்டழகி பெட்ரேஸ்மீது காதல் கொண்டு அக்காரிகையும் இவர் மீது பெருங்காதல் கொள்ள வளர்ந்து வருகையில் யாது காரணுத்தாலோ கனிந்த காதலுக்கு முறிவு ஏற்பட்டதால் பெட்ரேஸ், டாண்டேவைப் புறக்கணித்ததால், டாண்டே இயம்பொணு இன்னல் எரிமலேயில் வாழ்ந்ததை யொக்கத் துயரில் தோய்ந்துழலுகையில், பெட்ரேஸ் வேறு ஒருவனே மணந்து இருபத்தைந்தாம் வயதில் இறக்கவே டாண்டேவுக்குப் பெரிதும் விழ்ச்சி ஏற்பட்டுப் பேரிடர்ப்பட்டுத் துன்ப ஆழியில் மூழ்கி மூழ்கி அழலிடைபட்டப் புழுவெனக் குழைந்து வதிந்தார். காதலித்த காதலி புறக்கணித்த கடுமையையும்-உள்ளத்தைக்கொள்ளே கொண்ட காதலி கைவிட்ட கயமையையும்-பற்றுக்கொண்ட பொற்கொடி அயலானே மணந்த அநீதியையும் பொருட்படுத்தாமல் அன்று, இதயத்தில் இன்பக்கோயிலேக்கட்டிய கட்டழகியைக் கடவுளெனக்கருதிக் கனிந்து-கனிந்து உருகி-உருகி

உருக்கத்தின்பெருக்கால் பாடிய பாக்களால் உலகக்கவி யாக டாண்டே விளங்கியதோடல்லாமல் விட்டா நோவா என்ற அப்பாக்கள் உலக இலக்கியத்தில் உயர்பெரும் முத்துக்கள் என்று பாராட்டப்படுகின்றன.

பற்றுக் கொண்ட பூங்கோதை புறக்கணித்து மற்றவனை மணந்தாலும், டாண்டே அக்காதலியை மறவாமல், அக்காதலி மணந்து இறந்த பின்னரே தான் பிறிதொரு அணங்கை நண்பர்களின் கட்டாயத்தால் மணந்ததை எண்ணுங்கால் டாண்டே விடத்திருந்த மெய்க்காதலுக்கு வையகத்தில் எந்நாட்டிலும் ஈடு இல்லை என்றே துணிந்து கூறலாம்; மேலும் பெட்ரேஸ் என்ற பூங்கோதையைத் தன்வாழ்விற்கு வழிகாட்டும் ஒளியுடை விண்மீனென்றும், ஊக்கமூட்டி உயர்வுறவைக்கும் உணர்ச்சிப் பிழம்பென்றும் கூறி, பெட்ரேசை அழியும் மனிதன்மகள் அல்லவென்றும் ஆனால் கடவுள் மகள் என்று கூறியதைக் கருதுங்கால், கைவிட்ட காதலியை என்றும் மறவாமல் இறவாப் பாக்கள் அவள் மீதுபாடி கடவுள் மகள் என்றமைக்கு அவர்தம் மெய்க்காதலின் மாண்புடைச் செழுமையொளிக்கு உலகிலுவமையேது ?

தாதையால் தோல்வியும் அரசியலாலவமும் பெற்ற டாண்டே நம்பிக்கையை அறவே இழந்து உலகிலூசலாடி வாழ்வு அழல்வாழ்வென்று கருதி இவ்வுலகை முற்றும் வெறுத்து அவ்வுலகைப் பெரிதும் நம்பி ஆழ்ந்த கருத்துக்களுடன் செறிந்த நற்பொருள்களையும் சேர்த்து உளமுருக இன்னிசை கலந்து எழில் நிறைப் பொலிவுடை உவமையில்லா உயர்பெரும் பொன்னுன இலக்கிய மெருகிட்டு, டிவைன்காமெடி என்ற பேரிலக்கியப் பெருநூலைப் பாருக்கு நல்கி அவர் தம் தனி யறிவின் கூரிய இயல்பினை இலங்கவைத்து இதாலி மொழிக்கு இலக்கியக் கருவூலமாக்கி இடைக்காலத்திய ஐரோப்பிய உலகிற்கு உவமையில்லாப் பேரிலக்கிய ஒளியாய் ஒளிரவைத்து, அதில் மெய்யறிவை மிளிரவைத்துப் பேராற்றலைப் பிறங்கவைத்து உயரிய பேரழகை ஓங்க வைத்ததின் பெருமை என்னே!

நாடு கடத்தப்பட்டுப் புகலிடமின்றி வதிந்தகாலத்து உள்ளத்துணர்ச்சியால் அவனியினவலத்தால் ஆழ்ந்த சிங்

தனையின் பெருக்கத்தால் மனம் அனலானதின் விளைவால் காதலித்த காதலி கைவிட்ட கொடுமையால் அவ்வுலகின் அருமையை நடு நடுங்கி எழுதுகோலால் எழுதியதின் விளைவால் உலக இலக்கிய அரங்கில் டிவைன் காமெடி உயர்வுடை நல்லிடம் பெற்று நலமுடன் கலைமுடிதாங்கித் திகழ்கிறது.

டாண்டே நள்ளிரவில் கொடுங்காட்டிலிருக்கையில் ஒரு மலையைக் காண்பதாகவும் அம்மலை-கதிரவன் ஒளியால் ஒளிர்ந்து திகழ்வதாகவும், அம்மலையை எய்த முயலுகையில் நரியும்—சிங்கமும்—செம்புலியும் தடுத்துப் பயமுறுத்துகையில் வெர்ஜில் என்ற தொன்மைப் புலவனின் ஆவி தோன்றி உலக நரகத்தைக் கடந்த பின்னர் தான் அம்மலையை அடைய இயலுமென்றுகூறி அவரைத்தடுத்தாட்கொண்டு நரகத்தைக் கடக்கையில் புலனடக் காதவர்களுக்கும்—அறந் தவறியவர்களுக்கும்—தவறிழைத்தவர்களுக்குமுரிய மும்மூன்று வட்டங்களில் தண்டனை துய்ப்பதைக் கண்டு, கடந்தபிறகு மத்தியில் மூன்று முகமும் ஆறு சிறகுகளும் கொண்ட சாத்தானிருப்பதையும் கண்டு அவணிருப்பவர்களிடம் டாண்டே உரையாடி, பின்னர் அத்தீவிலுள்ள மலையை நண்ணுகையில் பாவம் புரிந்தவர்கள் தவம்புரிவதையும் மிகச் சிறு பிழை செய்தவர்கள் கடைசிக் கட்டம் எய்த இடர்ப்படுவதையும் கண்டு, எழில் நிறை மலர் வனங்களும், பறவைகளும், காடுகளும், அருவிகளும் உள்ள அம்மலையின் கடைசிப் பகுதியை எய்துகையில் வானவர் இவ்விருவரையும் அழைக்கையில் அவண் (டாண்டேவின் காதலி) பெட்ரேஸ் தெய்வீக தேவதையாக உயர்நிலை எய்தி இவரை அழைத்துக்கொண்டு தூய்மை எய்திய உயிர்கள் இன்பமுறும் கடைசிவீடு பேற்றிற்கு அழைத்துச் சென்றதின் கற்பினையின் சித்திரமே டாண்டேவின் டிவைன் காமெடி.

மக்களை மகிழ்வுறவைப்பதற்கல்லாமல் முன்னேற்றமடைதற்குரிய பண்பாட்டைப் பெறவைத்துத் தீங்கற்ற வாழ்க்கையிலீடுபடுத்தி ஆண்டவனை யடைதற்குரிய துறையை வகுத்ததுடன் தவறுடைப் பாதையிலேகுபவர்கள் பெறும் தண்டனையையும் கூறி உலகம் கடவுளாலமைக்கப்பெற்றதென்றும் அதில் எல்லையற்ற ஒளியைச்

சொரிந்த வண்ணமாயுள்ளாரென்றும் அவர் தம் ஆற்றல் இலங்குகிறதென்றும் அவர் தம் அன்பு திகழ்கிறதென்றும் உலகுக்குணர்த்திய டாண்டே, மண்ணகத்தில் மங்கையால் பங்கமடைந்தாலும் தம் கற்பனையில் ஆண்டவனுலகில் அம்மங்கையைத் தங்கமாக்குந் தெய்வீக தேவதையாகத் திகழவைத்த மெய்க்காதலுக் கிவ்வவனியி லீடுண்டோ ?

மண்ணகத்தில் முதல் மக்களின மரும்பிய தமிழகத்தில் வழக்கொழியா உயர் மொழியாயிலங்கும் முத்தமிழ், முடியுடை மூவேந்தர்களாலும் முச்சங்கத்தாலும் இனிதே காத்து வளர்க்கப்பட்டதெனினும், கொடுங்கடல்கோளால் தமிழகம் தகைந்து நாகரிகம் நலிந்து, மொழியியல் மாய்ந்து இருள்பெரிதும் நிலவிய ஞான்று தமிழர் ஒளியின்றி இடர்ப்பட்ட காலத்து, தொல்காப்பிய இலக்கணமும் வள்ளுவர் அற நூலும் ஓரளவு நாகரீகத்தை அறிவித்ததெனினும் வரலாறு-இசை-கூத்து-வாழ்விலுறும் இன்பம்-வாழ்விலுறும் அவலம் இன்னபிறவற்றை யறிதற்குரிய நூல் இல்லாப் பெருங் குறையைப் பெரிதுமகற்றி, பிழையில்லா மகிழ்வுடைச் சிலம்புச் செல்வத்தை முத்தமிழ் ஒளிமிளர இனிதே ஈந்த ஈடில்லாப் பெருமை இளங்கோ அடிகள் ஒருவருக்கே உண்டு.

சேரநாட்டரசன் மகனுகப் பிறந்து நாடாளாமல், செங்கோ லேந்தாமல் குணவாயில் கோட்டம் புகுந்து புலனடக்கிப் பரம்பொருளைப்பற்றி யொழுகி, பேரறிவு பெரிதும் பெற்றுக் கலை மணிமுடி யணிந்து தண்டமிழ்த் தங்கக் கோலேந்தி கற்பே உருவான கண்ணகியின் காலுக் கணி செய்த சிலம்பின் பெயரைவைத்துச் சிறந்த இயல்-இசை-நாடக நூலை உவந்தளித்த உயர்வு என்னே !

அடிகளார் சைவக் குடும்பத்தில் தோன்றிச் சமண சமயத்தைப் பின்பற்றினும், கோவலன் சமண சமயத்தையும் கண்ணகி சமண சமயத்தினின்று புத்த சமயத்தையும் கவுந்தி அடிகள் சமண சமயத்தையும்-மாதவி புத்த சமயத்தையும்-நான் மறையோன் சைவ-வைணவ சமயத்தையும் தழுவினவர்களாக விளங்கினும், சமயக் காழ்ப்பின்றி ஏனைய சமயங்களுக்கும் சால்பு நல்கி அக்காலத்தில் முதலிடம்பெற்ற சிவக்கடவுளுக்கு முதன்மை நல்கிப் பிறவாயாக்

கைப் பெரியோன் என்று அடிகளார் பகர்ந்து தம் சமயத்திற்கு முதலிடம் தராது முதலிடம் பெற்ற சமயத்திற்கே முதன்மை நல்கிய பெருந்தகைமைக்கு உவமை ஏது?

அரச அரங்கில் கூத்து-இசை-யாழ்-பாணி முதலியவற்றுள் துறைபோய பேரறிவுபெற்ற பேராசிரியர்களும் அரசரும் அமைச்சர்களும் வீற்றிருக்க இறைவன் பாடல் பாடவும் அதற்கேற்ப யாழும் குழலும் வாச்சியமும் பாணியும் இனிதே இயங்கவும் கலையும் அழகும் உருவான ஒண்டொடி மாதவி அரங்கேறிப் பிழையற்று அழகுற நடித்து பொன்மாலையைப் பரிசாகப்பெற்று, பெற்ற அப்பரிசைக் கோவலன் விலைகொடுத்து வாங்கி, அம்மாலையை மாதவிக்கீந்தவளுடன் வாழ விழைந்தோடித் தஞ்சம் புகுந்திருக்கையில், யாழாலும்-கூத்தாலும் மாதவி, கோவலனைக் கழிபேருவகையில் மூழ்க வைத்திருக்கையில், இந்திரவிழா நிகழ்ந்தபொழுது நீல நிற ஆடையுடுத்தி, கத்தூரிக் குழம்பைக் கதுப்பில்பூசி, செம்பஞ்சுக் குழம்பை சீறடியில் பூசி, அழகிய முத்து - பவழம் - மாணிக்கம்போன்ற நகைகளையணிந்து, அல்லி, கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை, வடிவுடன் வீழ்ந்தாடல் என்ற பதினொரு ஆடல்களைப் பிழையற ஆடி மகிழ்வுற வைத்த பெருமையை அடிகளார் விளக்கியதை எண்ணுங்கால் மாதவியின் மாண்புக்கு மாநிலத்தில் ஈடுண்டோ?

நாடறிய நன்மணம் புரிந்த கண்ணகியின் இல்லறவாழ்வையும், இசையும்-கூத்தும்-அழகும் உருவான மாண்புடை மாதவியின் கலைக்காதலுற வாழ்வையும் இனிதே சித்தரித்த அடிகளார் கலையியலையும் யாழ்மிழற்றலையும் நன்கறிந்த கோவலன் மாதவியினகப் பொருளை யறியாதவனாகி முதிர்ந்த காதலுக்கு முறிவு ஊழால் நிகழினும் மாதவியின் பற்று நிலைத்ததென்று உணரவைத்து ஒண்டொடியிடம் தஞ்சம் புகுந்தோன் ஓடி ஒளிந்ததை விளக்குகையில் மங்கையரிடத்தன்றோ மெய்க்காதல் உள்ளதென்று அடிகளார் விளக்குவதுடன் கண்ணகியையும் மாதவியையும் விளக்கிக் கூறுகையில் உயர்ந்தவர்-தாழ்ந்தவர் எவர் என்று அறிய முடியாமல் இருவருமே சிறந்தவரென்று விளக்கியதின் உயர்வென்னே!

பிரிவு நிகழ்ந்த பின்னர் கண்ணகியை எய்தி அவளிடத்திருந்த சிலம்பை விற்றுப் பொருளீட்ட மதுரைக் கேகுகையில் கவுந்தி அடிகளென்ற சமணத் துறவியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏகுகையில் அந்தர சாரணர்கள் தோன்றி வினை நிலத்திட்ட வித்துப்போன்று வினையை ஒழிக்க வியலாதென்றும் சுழல் காற்றுள்ள வெளியில் எரியும் விளக்குபோன்றது உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பென்றும் இப்பிறப்பின் நிலையைக் கொண்டே சென்ற பிறப்பையும், இப்பிறப்பிலாற்றும் வினையைக்கொண்டே வரும்பிறப்பையும் நன்கறிய இயலுமென்றும் மயக்கமற்ற முறையில் அடிகளார் அறைந்ததைப்போன்று எந்நாட்டவர் தொன்மையில் கூறியுள்ளார்?

கோவலன் மதுரையேகி சிலம்பு விற்கையில் பழி சுமத்தப்பெற்றுக் கொலையுண்டதை யறிந்த கண்ணகி, அரசனுடனுரையாடி அரசனுக்கவன் தவறை மெய்ப்பிக்கவே, அரசன் இறக்கவும் அவன் வழியே அரசி இறக்கவும் மதுரை அழலானதும் கற்பின் திண்மையாலென்றுணர வைத்து, கற்பரசிக்குத் தீங்கு நிகழின் அந்நாட்டிற்கே தீங்கு நிகழுமென்று விளக்கியதுடன் இவை யனைத்திற்கும் முற்பிறப்பின் வினையே காரணமென்று தெள்ளத் தெளிய விளக்கும் துணிபு ஆராய்தற்குரியது.

அடிகளாரின் சிலம்புக்கதையில் கோவலன் - கண்ணகி மாதவி இவர்களின் வாழ்வை முன்னிறுத்தி சமண இயலை இனிதே சிறக்கவைத்து அறந்தவறிய அரசனும் - அவன் மனைவியும் - அவன் நாடும் அழிந்தமையும், இவையனைத்திற்கும் ஊழே காரணமென்றும் கூறி இயலின் பெருமையும், இசையினுயர்வையும் கூத்தின் சிறப்பையும் சிறக்க வைத்தமையால் கலையியல்களின் பெருமை இனிதே விளங்குகிறது.

(தொடரும்.)

குண்டலகேசி.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

பழந் தமிழ் மரபின் நலம் புலப்படுத்தி நந்தாச் செல்வமாய்த் திகழும் ஐம் பெருங் காப்பியங்களுள் மாட்சிமை வாய்ந்தது குண்டலகேசி யாகும். பௌத்த சமயக் கருத்துக்களைத் தன் பாற் கொண்ட இக் காப்பியம், தமிழகத்தே உயிர்க் கொலை வேள்வியின் பொருட்டு வழக்குகளும் எதிர் வழக்குகளும் நேர்ந்து தொடர, அதுபோது துறவு நெறியில் விருப்புடைய புத்த சமயக் கோட்பாடுடையார், பழந் தமிழ் நாட்டில் நிலவிய அரிய நல்லொழுக்க முறைகளைத் தம் சமய வுணர்வோ டிணைத்துச் சமய நெறி பரப்புங் காலத்தில் இயற்றப்பட்டது. வரலாற்று ஆசிரியர்கள் கூறியவாறு தமிழ் மக்கள் பிறபுலத் தாரது வழக்கினில் வேட்கையுற்று தம்பால் வேறுபட்டுத் தமிழ் வளர்ச்சியில் கருத்தூன்ருது தாழ்வுற்ற காலத்தில், இக் காப்பியம் போற்றுவா ரற்றுக் காலமும், கடலும், செல்லும் கவர்ந்துபட மறைவுற்று இக் காலத்தில் பெயரளவானே நின்று நிலவுகின்றது. இதனை ஆக்கியோர் பெயர், ஊர் முதலியன இஞ் ஞான்று அறியப்படாது போயினும், ஏனைய நற்றமிழ் நூல்களுள் இங்கு மங்கும் எடுத்துக் காட்டாகக் காட்டப்பெற்ற குண்டலகேசியின் செய்யுட்கள் மூலம் காவியக் குறிப்பும் சுவையும் புலப்படுவதிலிருந்து, காப்பிய ஆசிரியர் தமிழ் வாழ்க்கையில் நிலவிய அகப் பொருள் நலனையும், புறப் பொருள் துறையினையும் முற்றும் கற்றுத் துறை போன பென்னம் பெரும் புலவ ரென்பதூஉம், அறங் காட்டும் அமைதியுடன் பௌத்த சமய மாண்பினை, நுண் மாண் நுழை புலமையால் மன்பதைக் குணர்த்தும் நெறியினை மேற் கொண்டவ ரென்பதூஉம் தெளிய விளங்கும்.

நல் லொழுக்கத்தின் விழுப்பத்தை வழுவாது தழுவி இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் இலராய் இரண்டினையும் ஒப்ப நோக்கி, தம் கடப்பாடுகளை ஒழுங் குறப் புரிந்து செல்லத் துணியுறும் நீர்மையும் மன வமைதியு

முடைய சான்றோராய கௌதம ரென்ற தமிழ்ப் பெரியாரால் அறிவுறுத்தப்பட்ட பௌத்த சமயம், ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தே வழங்கிய வைதிக சமயத்திலிருந்து புதிதாகக் கிளைத்த சமய மென்பர் சமயக் கலையில் வல்லுநர். இச் சமயம், இயற்கையிலே தமிழரது அறவொழுக்க முறைகளையும் ஒழுக்கத்து விழுப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதினுன், அச் சமயம், பழந் தமிழ் முதுமக்களோடு வணிக முறையில் துவன்றி வாழ்ந்து உறவு கொண்ட வேற்றுத் தேயத்து மக்கள் மூலம், சீனம், சிரியா, ஜப்பான், ஆப்பிரிக்கா, யவனம் யகுபதி தேயம் முதலாய பலவற்றுள்ளும் படர்ந்து பெருக்க முற்றிருந்த தென்பது நுண்ணறிவாளரது துணிபாகும்.

தமிழகத்தே தமிழரோடு ஒருங்கு சூழீஇக் கலந்து வாழ்ந்த பல் தேயத்தாரது வழக்கால் விளைந்த உயிர்க் கொலை வேள்வியை அறவே களைந்து அன்பினை நிலை நிறுத்திய பௌத்த சமயத்தை, முழுமுதற் கடவுளின் உண்மைக் கொள்கையையும், உயிர்கள் அவரை வழிபட்டு உய்ய வேண்டு மென்ற கொள்கையினையும் மறுக்கும் சமய மென்பர் பிற சமயத்தார். ஆனல் புத்தரது நுண்ணிய போதனையும் சமய நெறியினையும் ஓர் சிறிது ஆயின், பிற சமயத்தார் கூற்று அந்தியங்கிய சொல்லாகுமென்பது புலப்படும். அருள் மணங் கமழும் புத்தர் தம் போதனைகள் பழையபாளி (Pali) மொழியினில் விரவிக் காணப்படுவதால், அம்மொழியில் பயிற்சியுடைய பேராசிரியர் ரைஸ் டேவிட்ஸ் (Rhys Davids) என்பார் பௌத்த சமயம்பற்றிய தம் நூல்களில், மக்கட் பிறவியும் வாழ்வும் இயற்கையில் அமைந்திருக்கின்றனவென்றும், அவ்வமைப்பு வழி நின்று மக்கள் ஒழுகின், அவ் வொழுக்கம் யாவற்றிற்கும் அடிப்படையா யமைந்த மனவுணர்வு கடந்த நிலையில் விளங்கும் விழுமிய மூலவித்தின் ஒண்பொருளை யுணர்த்தி, துன்பங்களினின்றும் விடுபடுகின்ற பரிநிர்வாணமெனும் தூயநிலையில் சேர்ப்பிக்குமென்பது புத்தர் தம் உள்ளக் கிடக்கையென்றும், அவ்வுண்மைத் தெளிவை உணர்ந்தவாறு புத்தர் உலகுக்குப் பல் துறைகளிலும் விளக்கிப் போந்தனரென்றும் கூறியுள்ளார். மற்றும், அன்னரே, வித்தாய்ப் பரந்து நின்ற ஒன்று எங்கும் ஒழிவற நிறைந்து ஒளிர, அதன்பால்

தொடர்புடைய உயிர், தன்னுயிரிலும் மற்ற வுயிர்களிலும் உள்ளது அவ்வொன்றே என்ற தனிவுணர்வு நிலையினை கூட்டுவிக்க, உயிர் உடம்பொடு தொடர்புற்றது அன்பு செய்தற் பொருட்டே யென்றும், அத்தொடர்பின் பயனாகிய அன்புடைமை யினின்றும் அரும்பும் அறிவு பேரறிவென்பதூஉம், உயிர்கட்கு ஒரு பிறப்பிலுள்ள கெழுதகைமை பல் பிறப்பிலும் தொடர்ந்து வருதலும் பிறழா வுண்மை யென்பதூஉம் போன்ற பல நுட்பங்களையும் தம் தலை மாணாக்கர்களுக்குப் புத்தர் விளங்க வைத்தரென்றும் தம் நூல்களில் குறித்துள்ளார். நீக்கமற, நிறைகின்ற பொருளினின்றும் வளர்ந்து நிற்கும் அன்புமரத்து தண்ணீழலில் அமர்ந்து இன்பம் பிலிற்றும் நிருவாண நிலையினை யடைவது மக்கள் தம் கடமையாகு மென்பதையும், பிறவாமையாய இன்பம் பற்றறுதியினு லுளதாவதினுன், பரி நிருவாண மென்னும் தூய நிலையாவது பிறவித் துன்பத்திற்கேதுவாகிய ஐவகைக் கந்தமும் முற்றும் அற்றுப்போதலென்பதும், பிறப்பு இறப்பாகிய இருகூற்று அகல, நற்காட்சி, நல்லூற்றம், நல்வாழ்க்கை, நல்வாய்மை, நற்செய்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்து ஓர் தலைப்பாடுஆகியவைஇன்றி யமையாதனவென்பதும்,யாதாமொருவர் அவா நீப்பின், அங்நிலையே அவர், தம் அல்லலும் அருவினையும், வல்வினைத் தொந்தமும் முடிய, உடலை நீத்து பரி நிர்வாண மெய்துவ ரென்பதையும் போதி மர நீழலில் அமர்ந்து உணர்த்திய புத்தர் தம் அறிவு மொழிகள் யாவும் அவர் தம் கால்வழி வந்த நெறியினின்ருராலும், அந்நெறியிற் சார்ந்த ஏனைய மக்களாலும் நாளும் பலப்பலவாக திரிக்கப்பட்டன. புத்தர், வாழ்வியலில் அகப்புற வேற்றுமை உணர்வினைக் களைய, புலனடக்கத்தை வற்புறுத்துங்கால், படைக்கப்பட்ட ஐம்புலன்களை அவர் கெடுத்தொழிக்குமாறு கூறினு ரில்லை. அன்னுர் புலன்களைத் தூய்மைப் படுத்தி நன்னெறியின்கண் நிலை நிறுத்திக் காத்தலை அறிவுறுத்தினதை, அவரடியொற்றிப் பின் வந்த குருமார்கள் புலன்கள தழிவைக் குறிப்பது புலனடக்கம் யெனத் திரித்துக் கொண்டனர். இவ்வாறு புத்தர் தம் அறவுரைகளுக்குத் திரிபுகள் நேரின், அவை ஐயம், மயக்கம் முதலியன தோற்றுவித்துப் பலவித ஐய உணர்வையும் மயக்க வுணர்வையும் நல்குதல் இயல்பாகும். கடவுள், உயிர், கர்மம், மறுபிறவி, வினைவகை முதலியவற்றைப்

பற்றிய புத்தர்தம் நுட்ப விளக்கம் திரிபுற்றுக் காலதேய மக்கள் நிலைகளுக்கேற்பச் சிறிது சிறிதாக மாறுபட்டன. இத்தகைய திரிபெய்திய பௌத்த சமயக் கொள்கைகளே புறநாடுகளில் பெரிதும் பரவலாயின.

அறிவு விளக்கத்திற்குக் கேடு சூழுதல் இயற்கை யாதலான், அருள் வள்ளலாய புத்தரால் அறிவுறுத்தப் பட்ட சமயக் கொள்கைகளுக்கு மாறுபாடுகள் தோன்றவே, அச் சமயக் கோட்பாடுகள்பால் ஆரா அன்பும் அழியாத பற்றுங்காட்டி இன்ப வாழ்வு நடாத்தி வந்த பௌத்தத் தமிழர்கள், பௌத்த சமயத்தைத் திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் பெருநெறி வகுக்க, பௌத்தம், பெருநெறி (Mahayana) சிறுநெறி (Hinayana) யென இருவகைத்தாயிற்று. பெருநெறி அறமல்லாத வினை கடிந்து நல்வினை காத்துத் தமிழர் தூய நல்லொழுக்க விழுமிய முறைகளைத் தழுவித் தமிழகத்தே நிலவிய காலையில், புத்த சமயக் கருத்துக்களைத் தன் பாற் கொண்ட மணிமேகலை, குண்டலகேசி போன்ற காவியங்கள், கற்போர்க்கு ஆறுதலும் அமைதியும் அளித்துத் தமிழ்மொழியின் இலக்கியநெறியினை அணி யுறுத்துவன வாயின. பௌத்தப் பெரு வழி, உடல், உளம், உயிர் என்ற இம் மூன்றின் பால் படரும் துன்பமாகிய நோய், அறியாமை, பாவம் முதலியவற்றைப் போக்கும் பான்மையினை தன்னகத்தே யுடையதென்பதை, பழந் தமிழ் இலக்கிய நூல்கள் நுட்ப முற விளங்க வைத்தது சற்று சிந்தித் துணரற் பாற்று. மற்றும் இப் பெரு வழி பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பேதங் கெடுத்தருள் செய்யும் பெருமையும், அமைதி யுற்ற நல் வாழ்வில் மக்களைப் புகுத்தும் நீர்மை யுடையதா யிருந்தமையான், பாண்டிய நாட்டுப் பழம் பதியின்கண் வேரூன்றித் தழைத்து விளங்கிய சைவ சமயத்தையும் தத்தளிக்கச் செய்தது.

பிற தேயத்து மக்கள் உறவிலும் வழக்கிலும் வேட்கை மீதூர்ந்து தமிழ் மரபும் வழக்கும் மொழி வளர்ச்சியும் நெகிழ விட்டுத் தம் பால் வேறுபட்டு நிற்கும் தமிழரை மீட்கும் வகையில், பௌத்தத் தமிழர் முயன்றவை யாவும் பயன்படாது போகவே, இயற்கை வளர்ச்சிக்கு உறு துணையாய் நின்ற இயற்கையோ டியைந்த வாழ்வு சீர்மை குலைய,

வளர்ச்சிக்குரிய தமிழுணர்ச்சி இடர்ப்பாடுற்றது. இதனுன் பௌத்த மதம் தட்டுளுப்புப் பட்டு நிற்க, பௌத்தப் பெரு வழியின் ஒளியும் தமிழகத்திலிருந்து மறையலாயிற்று. சரித்திர வுலகம் கூறியவாறு, பிற தேயத்து மக்களது சமய நெறி தமிழகத்தில் ஆக்கமுறவே, சாதிப் பிரிவும் பிணக்கும் எழுந்தன. சாதி குலப் பிறப்பால் எழுந்த எரி பகை பூசல் யாவும், மக்கள் பால் நிலவிய உயிர் நேய ஒருமைப்பாட்டை சீர்குலைத்து பகைமைக் காழ்ப்பினையும் தீண்டாமையினை யும் மேலோங்கச் செய்தன. பல் வழியிலும் சிதறுண்ட நிலையில் கிடந்த பௌத்தத் தமிழர்கள், தமிழ் நெறியினைக் கைவிட்டு வேதாகம நெறிகட்குப் பெரிதும் மாறுபாடு கொண்டுள்ளவர்களாய், உயிர், இறை என்பன இல்லை யென்ற வீண் வழக்குப் பேசி வாது செய்யும் வகையில் உறுதிகொண்டு, மற விருள் தரும் பௌத்தச் சிறு நெறியினைத் தழுவ நேர்ந்தது. இதனையே பௌத்த சமயச் சரித்திரம் சாற்றுதலான், தமிழகத்தில் சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனுர் முதலானுர் காலத்தில் நிலவிய பௌத்தத்திற்கும், ஆளு டைய அடிகள், ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு முதலானவர்கள் காலத்திய பௌத்தத்திற்கு முளதாய வேற்றுமையினைக் கருதற்பாலது. எனவே சைவ சமய குரவர் காலத்தில் நிலவிய பௌத்தக் கொள்கைகள் யாவும் புத்த பெருமானது உண்மைக் கொள்கைகளல்ல வென் பதூஉம், அவைகள் பெரும் பாலும் அப் பெருமானின் பின் தோன்றல்களால் பல் வகையான் மாறுபாடுற்ற கொள்கைகளாகுமென்பதூஉம் அதனுன் அன்னுரை எளி தில் வாதில் வென்றழிக்க வாய்ப்பு சைவ சமய குரவர்களுக் குண்டாயது என்பதூஉம் சற்று ஊகித் துணரப்படும்.

பழந் தமிழ் மொழி நல னளிக்கும் காப்பியங்களில் போந்துள்ள பௌத்த சமயக் கொள்கைகளையும், உணர் வொழுக்கங்களையும் காணுங்கால், பௌத்த சமயக் கொள்கையுடையார், மொழியில் ஒன்றுபடுவராய் விளங்கி, தமிழர் போன்று தாமும் தமிழ் தழீஇய சாயலுடைய ராகவே இயைந்து நிற்கும் ஒருமை யுள்ளமும், தமிழ் நலமும், புலமையும் மிக்குடையா ரென்பது புலப்படும். குண்டலகேசி, பௌத்த சமயச் சார்புகொண்டு, அறமார் நாற் பொருளை விளக்கும் பெற்றியுடைய தாதலின், அஃது

சமய வேற்றுமையுடையாரும் ஒப்பப் போற்றிக் கருதும் தகுதி வாய்ந்தது. இதனை 'அகலக் காவியம்' என வீர சோழியம் போற்றும்.

கவியின் படைப்பாகிய காப்பியத்துக் குணத்தால் கவியின் குணமும் மாண்பு உணர்வுடையராம் மாந்தர் கண்டு கொள்வர். ஆனால் பெயரளவினிலே நிலவும் குண்டலகேசியின் சில செய்யுட்கள் இதுபோது கைக்குட் கனியாய் கிடைத்திருப்பதினன், அவைகளின் சுவை மூலம் ஆசிரியர் மணமுற்ற பொன் மலர் போல் பல்கலைப் புலமையிற் சிறந்த திருமாமுனிவ ரென்பதூஉம், வாழ்க்கைத் துறைகளில் பயன் மிகக்கொண்ட மெய்யுணர்வின ரென்றும், மெய்ஞ் ஞானச் சார்பும் மொழிப் பற்றும் ஆழ்ந்த சிந்தனை விழைவும் கூர்த்த மதி நலனும், சொல்லோவிய மதனால் உள்ளத்தைக் கவியச் செய்யும் ஆற்றலுமுடையா ரென்பதூஉம், செந்தமிழ் பயில்வாரை வாழ் வாங்கு வாழ்தற்குரிய வலி கோலி நிலையாய அமைதியில் அன்னாரை இசையுறச் சேர்க்கும் கருத்துடையா ரென்ப தூஉம் ஈண்டு உன்னி யறிதற் பால, பானை யவிழுக்கு ஓரிரு பத மென்ன எடுத்துக்காட்டிக் கூர்ந்து ஆழ்ந்து கருதுதல் சாலும்.

'முன்றான், பெருமைக் கண் நின்றான், முடிவெய்து காறும்
நன்றே நினைந்தான். குணமே மொழிந்தான், தனக் கென்று
ஒன்றேனு மில்லான் பிறர்க்கே உறுதிக் குழந்தான்
அன்றே இறைவன், அவன் றாள் சரணங்க ளன்றே!'

'பாலையாம் தன்மை செத்தும், பாலனாந் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளு மிவ் வியல்பும் இன்னே மேல் வரு மூப்புமாகி
நாளு நாம் சாகின்றே மால், நமக்கு நாம் அழாத தேனோ?'

என்பவை குண்டலகேசியின் பாக்கள். பொருட் புலப் பாட்டிற்குத் தடை நிகழாவண்ணம் இலக்கணவமைதியும் மெல்லோசையும் நிறைந்த சொற்களைப் பொருட் பேறு சிறக்க புலமை திறத்தாலே இடங் கருதி எளிமை தோன்ற ஆளும் திறனை ஆயும் வழி ஆசிரியர் தேனுறை தமிழ் மொழியியலை துறை போகக் கற்ற அஞ் சொல் நுண்

தேர்ச்சிப் புலவரென்பதும், கருத் திருத்தத் தக்க அரியன பகரும் நற் சிந்தனையாள ரென்பதும் நன்கு துணியப்படும். இப் பாக்களின் சுவையில் படியுங் காலை, உருக்கம். எழுச்சி மலர்ச்சி முதலாய உள்ள நிகழ்ச்சி இலங்குவது கண் கூடு. மற்றும் இக் காப்பியம் சமைத்தவர் தம் உள்ளுணர்வின் சுடர் ஒளியினையும் அறிவாட்சியினையும் அவர் தம் அணி நலம் சான்ற பாக்களே மிக நுட்ப திட்பமுற விளங்க வைத்தல் வெள்ளிடை விலங்கலாம்.

உணர்வொளியை ஆற்றல்மிக காப்பிய உலகில் யாத்த குண்டலகேசியின் ஆசிரியர் தம் இன் கவி பூக்கும் பொழிலையுடைய காப்பிய மாளிகையைக்காணுது போயினும், காவிய விருத்தப்பாக்களின் குறிப்புகளிலிருந்து புலனுகவும் காதையினை ஒருவாறு அமைத்து அகங்களி கூர வாய்ப்புளது. ஆனாலும் காப்பியத்து விழுநிதியும் ஊற்றமுமான கருத்துகளும் சிறப்புடைய பண்புகளும் இஞ்ஞான்று கிடைப்பதரிதாயிற்று. சங்கத்தமிழின் மெய்யின்பத்திருவினர்கள், காவியக்குறிப்புகளின் வழி ஊகித்தறிய இயலும் காதையின் அருநிலைப்போக்கு பின்வருமாறு :—

பல்வளங்கெழுமிய திருமருவு நீடு புகழ்த்திரு நகரதனில் இரு நிதிக்கிழமையுமுடையானொரு பௌத்தவாணிகச்செல்வன், மறுவில் கற்புவாய்ந்த தம் வாழ்க்கைத் துணைவியொடு இசைபட வாழ்ந்துவந்தான். ஈருடலிலும் ஒருயிர் தங்கிற்றென கண்டாரியம்புமாறு இருவரும் வாழ்விலும் தாழ்விலும் ஒன்றென விளங்கினர். வழுவிலாச் சீலம் வாய்மையிற் கொண்ட வணிகரது இல்லம் விருந்திருக்க வுண்ணுத வேளாண்டகைமையை விளக்குவதாயிற்று. தமவும் பிறவும் ஒப்பநாடி, வாழ்க்கை நிகழ்த்தும் நல்லோனுகிய வாணிக மணிக்கு ஓர் பெண் மகவு மாசில்லா மங்களத் திருவாய்ப் பிறந்தது. இஃது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, கண்டார் வியக்கும் வழி தாமரை முகமும் காமர் விழியும் தண்டமிழ் வாயும் கொண்டிருந்தது. செல்வத்திருவிற் செழித்த தீங்கனிபோல்வாளது இயற்பெயர் பத்திரையாகும். பருவமடைந்த பத்திரை ஓர் நாள் அந்திக் காட்சியை அழகு செய் மலர் போன்று, மாடத்தே முக மலர்ந்த வண்ணக் கிளிமொழியுடைய தோழியருடன் அகமலர்ந்து பந்தாடித்

தாமரை நடுவண் தண்மதி போன்று நின்றாள். ஆய காலையில் மாழமைப்பாவிய கன்னி, அரசன் காவலர் கட்டழகமைந்த இளந்திருவுடையானொருவனைச் சிறைபிடித்துச் சென்றதைக்கண்டு திகைத்து நின்றாள். வண்டு தேன் மலரைக் கண்டதொப்பக் கண்டதும் இவன் மீது காதல் மீக்கூர, கரும்பொன்னைக் காந்தம் இழுப்பது போன்று ஏதோ ஒன்று கற்புநெறி கடவா மாண்புடையாளை அவன் பால் இழுத்தது. கண்ட காதலி காதலர் நீரே! நீரென்வாழ்வு நீயலாது நிலை எனக்கில்லை' எனத் தனக்குள் உரையாடி, சந்திரனைக்கண்ட சகோரப்புள் போன்றிருந்தாள். கற்பும் பொற்பும் மிக்க கன்னி பத்திரை விரும்பும் வாலிபன் அரசன் விரும்பும் அறிவுடை அமைச்சரின் புதல்வனும் காளன். இவன் புத்தசமயம் தழுவிப் புகுந்தும், செய்கடனாகிய முறையெலாந்தவறி, கள்ளாட்டயர்ந்து நல்லறம் பேணாது அடங்காமனத்தால் கொடுமைக்கெல்லாம் கொள்கலமாயிருந்து, அஞ்சவரும் தீவினை செய்ததின் காரணத்தால் வேந்தன் பணித்தவாறு ஒற்றர் இவனைச் சிறையிலடைக்க நேர்ந்தது. வினைப்பயன் யாரை விட்டது இவ்வியனகல் ஞாலத்தே!

காதலன்பாலே கலங்கிய நங்கை நுவலவொண்ணாப் பசலை நோய்கொண்டு உணவிலும் உடையிலும் உள்ளத்தைச் செலுத்தாதே சோர்ந்தாள். உணர்வழிய அவள் உடலம் மெலிவுற்றது. தனதின்னுயிர் காதலர் தம்முடன் அணைய, அருளறம் பூண்ட பெத்தப்பெருமானாரது சேவடியை வணங்கிப் பூசனைசெய்து தம்மனதிற்கிசைந்த மணாளனையே கடிமணம் புரிய வலிய நோம்பியற்றினாள். அறவாழி யாள்வோன் கருணையான் அமைச்சர் மகனும் காளன் விடுதலை கண்டான். ஓவியத்திலும் எழுதலாகா எழிலுடைய பத்திரை காதலால் கலங்கியதைக் கண்ட பெற்றோர் மனம் பொறாது, அவளிச்சைப்படி காளனுக்கு சீருலாவிய திருமணத்தைத் தம் செல்வ நிலைக்கியையப் பொங்கு பல்லியமெங்கும் முழங்கச் சிறப்புற நடத்தினார். காதலிருவரும் வளர்பயிருக்கு வானமழைபோல் வாழ்வினுக்கருளும் போதி நாதனை நாளும் வணங்க, அன்னார் பயிரும் பசுமையும் போன்று காதலாற் கலந்து போகம் புசித்து ஒன்றி வாழ்ந்தார். மன மகிழ்வுக்குரிய சுகமே நினைந்து சுகந் தரு சுகமே போல் இணை பிரியாது பூவும்

மணமும் போல் பொருந்தி இருவருமானுர் ஒருவராக. இவ் வண்ணம் நல்ல போதாய்ச் சென்றது அன்பினேடு இல்லற மமர்ந் துறையும் நாளே.

அழ கெனப் படுவது அரிவை யெனக் கொண்ட காளனது காதல் வாழ்வில் நாளடைவில் கலக்கம் வந்துற்றது. காத லின்பம் மனையற மறியா முறுகிய மடவோர் காமமாக மாறிக் காதலர்களை அல்லற் காட்டில் நுழைத்தது. இதனுல் காதல் நெறி பிறழ அமைந்ததினுன், புதல்வர்ப் பேறு முதலிய உறுதிகள் இலவாயின. ஊடலும் கூடலும் விரவிக் கலந்த காதல் வாழ்வில் மன வொருமை யோடு தோய்ந்த மகிழ்வு இல்லாததால் கூடல் சுருங்கி ஊடல் பெருக, வாழ்க்கை அழுகையாயிற்று. சினவெறிச் சிற் றுரைகள் ஊடலில் இடை யிடையே வளர, குறைகள் கூறும் குறும் பூசல்கள் பொங்கி வீறிட்டன. கணவன் தன்பாலுற்ற அன்பு கழன்ற தென கேசி அறிந்த ஞான்று, கொண்டவர் இகழ்ந்தால் கண்டவர் இகழ்வரென ஏங்க, அவளது மனம் அழன்றது: உள்ளம் சுழன்றது.

காலனது போக்கைக் கொண்ட காளனுடன் வெறுப் பின்றி உரையாடாது பொறையுடன் இல்வாழ்க்கை நடத்திய பத்திரை ஒரு நாள் 'நலமே நனி சிறந்த குல மதனில் பிறந்த என் வாழ்வு நின் கொடுமையால் குலைந்தது. ஒழுக்க முடைமை குடிமை யல்லவோ. இழுக்கம் இழிந்த பிறப்பாய் நின்னை இறுத்தியது. அறம், தயை நினக் கில்லையோ! எனச் சுளிந்து பகர்ந்தாள் இகழ்ச்சி மொழியே. இளமையில் வீணருடனும் கோளருடனும் உறவு கொண்டு அறமல் வினையில் நின்ற நிலையினையும், மின்னனைய செல்வ மெனு மாயப் பொய்யினில் விழுந்து புன்மைகள் பல புரிந்தமையும் பத்திரை கூறுகின்ருளென, சீலமும் தவமு மிலாத் தீயனும் முரட் காளன் கருதி மறு மாற்ற முரைக் காது பகைச் சினம் கரந்திருந்த பேரவி நகையால் பொழு

தினைப் போக்கி வாயிற் பொய்யும் உளத்திற் பகையும் கொண்டு வஞ்சம் குயிற்றும் வாய்ப்பினை எதிர் பார்த்திருந்தான்.

எள் பிளவு போன்ற உள் பகைமையுடைய உறவு நீண்ட காலம் நிற்குமோ! கூரிய வாளினுங் கொடியனும் காளன் 'கருத்திற் கினியாய்! மாரனை வென்ற வீரனும் போதி அறிவோ னருளால் இளமையில் துயர்ச் சிறை நீக்கப்பட்டதினுன் அவன் முன் பூசையும் தானமு மியற்ற நிவப்பு மிக்க இறை வெற்பிற்குச் செல்வோம். ஆதலால் நீயும் உடன் வருக' என அன்ன குணமே யுடைய அன்ன நடைப் பத்திரையாம் கேசிக்குத் தேனூர் வஞ்சத் தீஞ் சொல் லுரைத்தான். கேட்ட கோதை அருளே யான பொருளாகிய போதி நாதன் முன்னிலையில் இனி கணவருக்கு ஆணவம் தளர அன்பும், அருளும், ஆற்றலும் மெய் யின்பமும் பெருகு மென தன்னுட் டேறி மலை மேவும் செம்மலைக் காணத் தம் மணுளருடன் வண் குவ டெய்தினுள்.

பிறப்பின் சார்புகளை நீக்கும் படிகளி லேறி மலை முடி மிசைக் கேசி சென்றதும் நன்றி கொன்றிடும் காளன், காலன் போல் நின்று 'கொடு மனம் படைத்த பேதையே! நின் குடிமைச் சிறப்பும் செருக்கினையும் கருதி என்னை இகழ்ந்ததாலே நின் இறுதியை இவணே நாடிக் கொண்டா யெனத் தீப் பொறி பரக்க, கடன் மடை திறந்தா லொப்ப கடுஞ் சொல் பொழிவானுயினுன். பாயும் புலியினைக் கண்டிடும் புல் வாய்ப் போன்று நின்ற பத்திரை, கண்ட வுடன் மணந்து, இணங்கியபோது உறவு கொண்டு, சினந்தவுடன் பிரிந்து பிணங்கி ஏசும் பாதகர் கொடுமை பாரில் ஓங்கியுள்ள தெனக் கருதி, சிறு வாழ்வில் எத்தகைய இன்னல்கள் சூழ்ந்துள்ள தெனச் சற்றுக் கலங்கித் தன் கணவரது சித்தப் பிழையினைச் சிந்தித்துத் துயர்ப் பரவை யுள் அழுந்தினள்.

கணவற் கினியளாகிய கற்பரசி குழலினும் இனிய மழலை மென் மொழியொடு தன் ஐ முன்னின்று 'பொன்னை யும் பொருளையும் வேண்டாது நின்னையே நாடியிருந்தேன். கள்ளமில் நெஞ்சால் உள்ளதைப் புகன்றதற்கு மன்னித் தருள்க. அடியனேன் அறியாது பிழை புரிந்திருப்பின் கருத்தினிற் கருதேல். ஓர் பகல் பழகினுர் அன்பு காரண மாக உயிரை யீவர். பன்னுள் பழகியும் வன்பு காரண மாக யான் உயிரையும் துறப்பல். யாக்கை நானே. ஆருயிர் நீரே! உம் பணிக்கே என் வாழ்வை யளித்தேன். மங்கை யர் வருந்தின் மாநிலம் வருந்தும். அன்னுரை வருத்தியவர் எந் நாளும் வெந் நரகி லெய்துவர். என்னை வாழ்விக்கும் இறை உம்மையும் வாழ்விக்கட்டும். கற்புளக் காதல் சொற் பழுதாகாது. தூய காதலிலையேல் சாதல் திண்ணம். உம்மையன்றி எனக் கொரு தஞ்சமிலை. அன்புடனுளுதி. தவறு இழைத்தேனுயின் தாங்கள் தான் மன்னித் தருளல் வேண்டும். நெல்லுக்கும் உமி யுண்டு. நீருக்கும் நுரை யுண்டு. புல்லிதழ் பூவிற்கு முண்டு. முந்தையில் விதியை யாவர் தாம் தடுத்திட வல்லார். வந்தது வருக. உரிய தொன்றைத் துணிந்து செய்ம்மின்' எனக் கூறினுள். மத் துறு தயிரைப் போல் மயங்கிய மறுவிலா நங்கை தம் முடிபட கணவர் தம் அடி வணங்கி 'இறுதியை நாடு முன் நும்மை மும் முறை வலம் வந்து வணங்கும் வரந் தர வேண்டும்' என்று பணி மொழி கூறக் காளனும் இணங்கி ஞன். வலம் வரும்போ தெல்லாம், சிறிது சிறிதாக கேசியி னது உடலின் உறுப்புகள் தம் முடலகத்தே தோயாதவாறு ஒரு பக்கலே நகர்ந்து செல்ல, காளன் மலை வரம்பில் கால் இடறி வஞ்சம் வளரும் நெஞ்சம் பிளந்துபட ஆழ மறியாப் பெரும் பாழியில் வீழ்ந்து மறைந்தான். தீதே செய்யும் வஞ்ச நெஞ்சுடையானை அறம் கொல்லு முன், அவன் நெஞ்சமே அவனைக் கொன்றது. வெஞ் சின விதியினை யாவர் தாம் வெல்ல வல்லார்!

இந் நிகழ்ச்சியினைக் கண்ட மின்னையுற்ற நடுக்கத்து மேனியாள் விரிந்த கருங் குழலும் நீ ரொழுகும் கண்ணு முடையாளாய் மனஞ் சிறிதும் சகியாது வாழ் வெலாம் இற்றது கொலென ஏங்கிப் போதி நாதனை விளித்து, 'பாவ வினையினைப் பார்ப்பதற்காகவா பாவி இங்குற்றேன். இருக்கவும் வகையில்லையே! இறக்கவும் வகையில்லையே!' என நெட்டுயிர்ப் பெறிந்து நெடிது புலம்பி வெந் துயர் பொருந்திட விழுந் தலறித் தாமும் தன் கணவருடன் பாழில் மறைந் தொழிய மனந் துணிந்தாள். புத்தர்பிரான் கழலினைப் பேணி நாளும் உருகிய அன்பு கூர்ந்த சிந்தையும் ஒழுக்கமு முடையாள், தன் முன், பாலில் படு நெய் போன்று புத்தர், கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க முடையராய் மறைய நின்றதனைக் கண்டனள். அதுபோது 'வாழ் வெல்லாம் இருள். வினையின் வந்தது வினைக்கு விளைவாயது. மன மழுங்குவது தக வன்று' என விசும்பில் வாசக மிசைப்ப, மன்னுயிர் வாழ மற வலிக் கொடுமை வீழ தன்னுயிர் கொடுத்த புத்தரை ஆதரவோடு மனத் தினிற் கருதி, நடப்பவை யாவும் நல்லதற் கென உறுதி கொண்டாள், நற் கேசி. இறைவன் பணியில் நிற்க மனச் செம்மை கொண்ட கேசி மயல் கொளிந்த வாழ்வினை விரும்பாது தவத் திறம் பூண்டு அறங் கேட்டுப் பவத்திற மற நோற்று இறை பணியும் உயிர்ப் பணியும் இயற்றும் புத்த பிக்குணியா யிருந்து புத்தர் சேவடியையே புக லெனக் கொண்டாள். இவ்வாறு அறத் தெளிவும் நற் பணி வேட்கையுங் கொண்டு அண்ணிக்கும் வாழ்க்கை யோடையிற் றிளைத்து மெய்யுணர் வியக்கந்தனில் விளக்க மும் வெற்றியும் கண்ட கேசி புத்த ஒளியின் நீழலிலே பொருவில் அன்புருவ மானாள்.

ஞாலவிளக்கு

The Light of the world.

கோ. தியாகராசன், G. M. V. C. தஞ்சை.

ஒப்புயர்வில்லாத் திருக்குறளைத் "தமிழ் மறை" என ஏற்காத பெயரால் அழைக்கின்றனர்.

தங்களுக்குச் சிறந்த நூலெனவும், தங்களுக்கென வகுத்த தனி நூலாகையால் அதை மற்றவரிடத்திலிருந்து மறைக்க வேண்டுமெனவும் கருதிய ஒரு வகுப்பினரின் நூல் இந்த 'மறை' என்பது.

தமிழரிடத்திலிருந்து இந்நூல் மறைக்கப்பட்ட காரணத்தால் இந்நூலை 'மறை' என்றனர்.

நம் திருக்குறளை நம் முன்னோரும் நாமும் ஒருவரிடத்திலிருந்தும் மறைக்கவில்லை. இந்நூலில் மறைவான பொருள்கள் இருக்குமாயின் அவைகளை விளக்கிக்காட்டப் பதின்மர் உரை எழுதினார்கள். எனவே இந்நூலை 'மறை' என்றழைப்பது ஏற்காது.

தமிழரால் 'மறை' என்றழைக்கப்படும் நூலிற்கு உரித்தானவர்கள் அந்நூலை 'வேதம்' என்றழைப்பர். 'வேதம்' என்னுஞ்சொல் 'ஞானம்' என்னும் பொருளுள்ள அடிவேர்ச்சொல்லிலிருந்து வந்தது.

திருக்குறளிலுள்ள பாக்கள் "குறள் வெண்பா"க்களாகையால் இந்நூல் 'திருக்குறள்' என்னும் பெயர் பெற்றது.

நான்கு நூல்களின் தொகுதியை 'வேதம்' என்கின்றனர். திருக்குறளோ ஒரு தனி நூல்.

வேதத்தை சம்கிதம் (the original text of the Veda) பிராமணம் (the portion dealing mainly with rituels) உபநிடதம் (the portions dealing withphilosophical speculations) எனப் பிரித்தனர்.

திருக்குறளை அறம், பொருள், இன்பம் எனப் பிரித்தனர்.

வேதங்களில் முதல் நூலாகிய 'ரிக்' வேதத்தைப் பலர் எழுதினர்.

முதல் மண்டலத்தையும், பத்தாவது மண்டலத்தையும் பல புலவர்கள் எழுதினர்கள்.

இரண்டாவது மண்டலம் கிரிச்ட் சாம தேவராலும் அவர் பிறங்கடையராலும் எழுதப்பட்டது.

மூன்றும் மண்டலத்தை விசுவாமித்திரரும் அவர் பிறங்கடையாரும் எழுதினர்கள்.

நான்காவது மண்டலத்தை வாமதேவரும் அவர் பிறங்கடையரும் எழுதினர்கள்.

ஐந்தாவது மண்டல்த்தை அரி என்பவரும் அவர் குடும்பத்தாரும் எழுதினர்கள்.

ஆறுவது மண்டலத்தை 'பாரத்துவச்சர்' என்பவரும் அவர் பின்னோரும் எழுதினர்கள்.

ஏழாவது மண்டலத்தை வசிட்டர் எழுதினர்.

எட்டாவது மண்டலத்தில் பெரும்பாலும் கண்வர் குடியில் வந்தவர்களால் எழுதப்பட்டது.

திருக்குறளை நம் திருவள்ளுவர் ஒருவரே எழுதினர் 'ரிக்' வேதத்தில் இந்திரன், அக்னி, வர்ணன், அசுவனி, சாவித்ரி, ஞாயிறு, சிவன், திருமால் முதலியோரையும் இன்னும் பலதேவர்களையும் வாழ்த்தியும், வணங்கியும், வேண்டியும், போற்றியும் அமைத்த பாக்கள் மிகுதியாயுள்ளன.

நம் திருக்குறளில் மேற் காட்டிய பாக்களைப் போன்றவை கிடையா.

'யசுர்' வேதத்தில் உரை நடைகள் உள்ளன. திருக்குறளில் உரை நடை இல்லை.

யசுர் வேதத்தில் குறிக்கப்பட்ட சடங்குகளுக்கான பொருள் களை தேடிச் சேர்க்கும்பொழுது, அவைகளை விளித்து இன்னது செய்யுங்கள், இன்னது செய்யாதீர்க ளெனக் கூறும் பகுதிகள் (மந்திரங்கள்) உண்டு. (எ. கா) வேள்விக்கு வேண்டிய குச்சி களைச் சேர்க்கும்பொழுது 'என் விருப்பம் நிறைவேற உன்னை விருப்புடன் அழைக்கிறேன்' என்றோதப்படும். தாங்கள் பயன் படுத்த இருக்கும் கத்தியை விளித்து 'ஏ கத்தியே என்னைத் துன்புறுத்தாதே' என்று சொல்லப்படும். திருக்குறளில் இத் தகைய கூற்றுக்கள் எங்காவது உண்டா?

வேதங்கள் சைவம், மாலியம், வேதாந்தம், சித்தாந்தம், துவைதா அத்துவைதம் என்னும் பல சமயங்களின் கொள்கை களையும், கோட்பாடுகளையும் கூறும். திருக்குறளோ ஒரே கடவுளையும் சடங்குகள் அற்ற வழிபாட்டையும் புகலுவது.

அதர்வ வேதத்தில் தன் மாற்றானுக்குத் தீங்கு விளைக்கவும், சூனியம் வைத்தல் முதலியனவற்றிற்கும் ஆன, நாகரீகம் அற்ற, மந்திரங்களும் சடங்குகளும் சொல்லப்பட்டுள்ளன. திருக்குறள் படிப்பவர் இத்தகையக் கருத்துக்களைக் காணவே முடியாது.

'Black magic, injuries to one's enemies and various other aspects of life which were wont to call more primitive are in the fore-front in Altarrnveda'

மக்களுக்கு அறிவும், ஒழுக்கமும், புகட்டும் கூற்றுக்கள் வேதங்களில் உ ள் ள ன. இதுபோலவே கிருத்துவர்களால் போற்றப்படும் பைபிலிலும், முகமதியர்களால் போற்றப்படும் குருணிலும் உள்ளன. சீனர் மதிப்பு மிக்க நூலாகக் கருதும் கன்பூசியன் அனலெக்ட்சிலும் இத்தகைய பொன் மொழிகள் உண்டு. இக் காரணத்தால் திருக்குறளை பைபில் எனவோ, அல்லது குருன் எனவோ, கன்பூசியன் அனலெக்ட்ச் எனவோ சொல்லமுடியாது.

'அறிவினுனுகுவதுண்டோ பிறிதின்நோய் தன்நோய்போல் போற்ருக்கடை" என்னும் குறளுக்கு ஒத்த கருத்துள்ள—

"இடரானது தான் இன்பந்தான் யாவர்கேனும் அகிடுமேல் படராநின்ற அவை தானும் உறுவான் பரமயோகி என்பான்" என்னும் பகுதி பகவத்கீதையில்உள்ளதால் திருச்குறளை பகவத் கீதை என்பது ஏற்குமா? வேதத்தை போற்றுவோர் வாழ வேண்டுமெனவும் மற்றையோர் அழியவேண்டுமெனவும் கூறும் மந்திரங்கள் வேதத்தில் உள்ளன, இத்தகைய கருத்துக்களை திருக்குறளில் காணமுடியுமா!

பிறப்பொவ்வா எல்லா உயிர்க்கும் என்னும் வேதத்தின் கருத்திற்கும் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் திருக்குறளின் சாற்றுக்கும் எவ்வளவு மாறுபாடு உளதோ அது போலவே மற்றப் பற்பலக் கருத்துக்களிலும் உண்டு. தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லலாம் என்று கூறும் வேத மொழிக்கும் "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறி—தின்னுயிர் நீக்கும் வினை" என்னும் திருக்குறட் பாவின் கருத்திற்கும் என்ன மாற்றம்!

திருக்குறள் மறை அல்ல என்பதற்கும், அவ்வாறு அழைப்பது திருக்குறளை இழிவு படுத்துவதாகும் என்பதற்கும் இன்னும் எத்தனையோ சான்றுகள் எடுத்துக் கூறலாம். யாதாமொரு பொருளை மற்ெருரு பொருளுடன் ஒப்பிட்டால், ஒப்பிடும் பொருள் ஒப்பிட்ட பொருளுக்குக் குறைந்த தன்மையுள்ளது என்று விளக்கும். "உயர்ந்த தன் மேற்றேயுள்ளுங்காலை" என்னும் தொல்காப்பிய ஓத்தைக் கருத்திலிருத்தி திருக்குறளை மறை என்றழைக்காதீர்கள் என்று மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறன்.

திருக்குறளின் உயர்வை உவமையால் காட்டவேண்டுமெனில்—இருளை விலக்கி பொருளை விளக்கும் ஞாயிறு போன்று மக்களின் அறியாமையெனும் இருளை விலக்கி மெய்ப்பொருளை விளக்கும் திருக்குறளை "ஞால விளக்கு" என்று போற்றுங்கள்.